**TN FIRST**
(தமிழ்நாடு முதலிடம்: அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில்)

# தமிழ்நாட்டில் பேரிடர் காலங்களிலும் அதற்கு அப்பாலும் விளிம்பு நிலை மக்களிடையே மீள்வாழ்வு மற்றும் சமூக அணிதிரட்டல்

மார்ச் 2023

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

**TN FIRST**
*(தமிழ்நாடு முதலிடம்: அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில்)*

# தமிழ்நாட்டில் பேரிடர் காலங்களிலும் அதற்கு அப்பாலும் விளிம்பு நிலை மக்களிடையே மீள்வாழ்வு மற்றும் சமூக அணிதிரட்டல்

மார்ச் 2023

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

# மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மற்றும் விளிம்பு நிலை மக்களின் உரிமைகளை பாதுகாத்து ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் செயல்பட்டு வருகிறது.

HRF சட்டம் மற்றும் அரசு நிறுவனங்கள் குறித்த தெளிவான கண்ணோட்டங்களை எளிமையான முறையில் வழங்குவதன் மூலம் சமூகரீதியாக ஒதுக்கப்பட்ட மக்களின் திறன்களை வளர்த்து அவர்களை தங்கள் உரிமைகளை பயன்படுத்திக் கொள்ளவும், முடிவெடுப்பதில் அவர்களின் பங்கை அதிகரிக்கவும், மற்ற பொறுப்புடைய அரசு நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தை மற்றும் உரையாடல் மூலம் ஜனநாயகத்தை ஆழப்படுத்திட உதவுகிறது.

மேலும் மனித உரிமை செயல்பாட்டாளர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் சட்டத்திலும் சமூகத்திலும் மனித உரிமை கலாச்சாரத்தை நிறுவனமயமாக்கி ஜனநாயகத்தில் பெரிய அளவிலான குடிமைச் சமூக ஈடுபாட்டிற்கு வழிசெய்கிறது.

மனித உரிமை மற்றும் மேம்பாடு ஆராய்ச்சி அமைப்பு, சிறந்த ஆதரவு மற்றும் மீட்பு நிதியதுடன் (Recover Better Support Fund - GIZ) இணைந்து தமிழ்நாட்டில் பேரிடர் காலங்களிலும் அதற்கு அப்பாலும் தொற்றுநோய்க்குப் பிந்தைய மீட்பு செயல்முறைக்காக விளிம்பு நிலை மக்களிடையே மீள்வாழ்வு மற்றும் சமூக அணிதிரட்டல் பணியை நவம்பர் 2021இல் தொடங்கியது. தமிழகத்தின் 30 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து அதில் உள்ள 137 தொலைதூர ஊராட்சிகளில் குறிப்பாக பெண்கள், தலித் மற்றும் பழங்குடியினர் தலைவர்களாக உள்ள ஊராட்சியில் 18,000 விளிம்பு நிலை குடும்பங்களுடன், TN First (தமிழ்நாடு முதலிடம்: அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில்) என்ற முயற்சி மூலம் அனைத்து மனித வளர்ச்சிக் குறிகாட்டிகளிலும் தமிழ்நாடு முதலிடம் பெறுவதையும், இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள் அதிகரித்து வரும் நிலையில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மற்றும் சமூகங்கள் மேலும் மீள்தன்மை கொள்வதையும் உறுதி செய்தது.

இந்த குறுகிய காலத்தில், தொலைதூர குக்கிராமங்களில் சமூக ரீதியாக ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் முறையான அரசு அமைப்புகளை அணுகி, ₹776 மில்லியன் அளவிலான உரிமைகளை (நிலம், வீடுகள், ஓய்வூதியம் போன்றவை) பெற்றுள்ளனர். இதனை 454 நாட்களுக்கு என கணக்கிட்டால், ஒரு நாளுக்கு ₹1.7 மில்லியன் பண மதிப்புள்ள உரிமைகள் கிடைத்துள்ளன. கூடுதலாக,

₹650 மில்லியன் மதிப்புள்ள அவசரநிலை அல்லது உயிரிழப்பு நேரங்களில் வழங்கப்படும் அரசாங்க காப்பீட்டுத் திட்டங்களில் மக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வியக்கத்தகு பணியை செய்து முடிக்க 1 டிசம்பர் 2021 முதல் 31 ஜனவரி 2023 வரை 43,166 விண்ணப்பங்கள் இணைய வழியிலும் நேரடியாகவும் அனுப்பப்பட்டன. இதில் 15,002 அடிப்படை சான்றிதலுக்கான விண்ணப்பங்களும் அடங்கும். இதில், 17,196 (39.84%) விண்ணப்பங்கள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான உறுதி சான்றிதழ்கள் / பயன்கள் பெறப்பட்டுள்ளன. இந்த சாதனைக்கு 34 மாவட்ட பொறுப்பாளர்களும் 23 மாவட்ட வழிகாட்டிகளும் முக்கிய காரணமாவார்கள்.

**நோக்கம்**

தொலைதூரப் பகுதிகளில் உள்ள சமூக ரீதியாக ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் (SEVC) அவசரகால நிவாரணம், அனைத்து உரிமைகள் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பலன்களை அணுகுவதை உறுதிசெய்து, நிலையான வாழ்வாதாரங்களை அணுகி, தகுதியுள்ள அனைத்து அரசு ஆதரவு திட்டங்கள் மற்றும் வசதிகளிலிருந்து பயனடைவதையும் உறுதி செய்வது.

## திட்ட முன்னுரிமை சமூகங்கள்

- பட்டியல் சாதியினர்
- பட்டியல் பழங்குடியினர்
- மீனவர்கள்
- புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்
- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடம்பங்கள்
- தனித்து வாழும் பெண்கள்
- ஊனமுற்றவர்கள்

## புவியியல் பகுதி

மாவட்ட பொறுப்பாளர்கள் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள 161 கிராம ஊராட்சிகளில் (சுமார் 481 கிராமங்கள்) கணக்கெடுப்பு நடத்தி அதில் 137 கிராம ஊராட்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## உள்ளடக்கப்பட்ட சமூகங்கள்

மிகவும் பின்தங்கிய சமூகங்களைச் சென்றடைவதே குறிக்கோள் ஆதலால் 8,625 (47.6%) பட்டியல் சாதியினர், 3,238 (17.9%) பட்டியல் பழங்குடியினர், 1,526 (8.4%) பிற்படுத்தப்பட்டோர், 1,627 (9%) மிகவும் பிற்படுத்தப்பட்டோர், 2,732 (15%) மீனவ சமூகங்கள்,


மற்றும் 338 (1.8%) தங்களின் சமூக அடையாளம் தெரியாதவர்கள். மீனவர்களில், 10 குடும்பங்கள் (0.06%) SC, 335 குடும்பங்கள் (1.8%) ST, 191 குடும்பங்கள் (1%) BC, மற்றும் 948 (5.24%) MBC, 1,248 (6.9%) குடும்பங்கள் தங்கள் சாதியைக் குறிப்பிட தெரியாதவர்கள்.

**சிறப்பம்சங்கள்:**

1 டிசம்பர் 2021 முதல் 31 ஜனவரி 2023 வரை மொத்தம் 43,166 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன, அவற்றில் 17,196 (39.84%) பயன்கள் /சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன.

<table>
<tr><th rowspan="2">குடும்பங்களின் எண்ணிக்கை</th><th colspan="12">18 வயதுக்கு கீழ்</th></tr>
<tr><th colspan="3">சிறுமிகள்</th><th colspan="3">சிறுவர்கள்</th><th colspan="3">திருநங்கைகள்</th><th colspan="3">மாற்றுத் திறனாளிகள்</th></tr>
<tr><td rowspan="4">18,086</td><td colspan="3">8,549</td><td colspan="3">8,732</td><td colspan="3">120</td><td colspan="3">299</td></tr>
<tr><th colspan="4">18 முதல் 40 வயது வரை</th><th colspan="4">40 முதல் 60 வயது வரை</th><th colspan="4">60க்கும் மேற்பட்டவர்கள்</th></tr>
<tr><th colspan="2">பெண்</th><th colspan="2">ஆண்</th><th colspan="2">பெண்</th><th colspan="2">ஆண்</th><th colspan="2">பெண்</th><th colspan="2">ஆண்</th></tr>
<tr><td colspan="2">14,398</td><td colspan="2">13,496</td><td colspan="2">8,683</td><td colspan="2">7,321</td><td colspan="2">2,675</td><td colspan="2">2,465</td></tr>
</table>

இம்முயற்சியின் வெற்றி விகிதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாறுபடுகிறது. ஒட்டுமொத்தமாக, மருத்துவக் காப்பீடு (75%), நூறு நாள் வேலை திட்டம் (60%), மற்றும் கல்வி (83%) தொடர்பான விண்ணப்பங்களில் அதிக வெற்றி வீதம் உள்ளது. ஆனால் வீட்டு மனை பட்டா, இலவச வீடு தொடர்பான திட்டங்களை பெறுவதில் வெற்றி விகிதம் 8%க்கும்




குறைவாக உள்ளது. அதைத் தொடர்ந்து, நிலம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அடைவதில் வெற்றி வீதம் 35% மற்றும் 30%ஆக உள்ளது. இருப்பினும், இவற்றின்கீழ் விண்ணப்பிக்கப்பட்ட பல விண்ணப்பங்கள் இப்பொழுதும் செயல்பாட்டில் உள்ளன. இதனால் அந்த விண்ணப்பங்களின் வெற்றி விகிதம் மேலும் அதிகரிக்கும்.

பெரும்பாலான விண்ணப்பங்கள் நல வாரியங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன (7,876). அதைத் தொடர்ந்து உள்கட்டமைப்பு (7,523), தகுதியுள்ள அரசு திட்டங்களுக்கு விண்ணப்பிக்க தேவையான அடிப்படை ஆவணங்கள் (6,834) மற்றும் வீட்டுமனை மற்றும் வீட்டுவசதி திட்டங்களில் (6,312) பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகம் பெறப்பட்ட

உரிமைகள் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டவை (3,238). தொடர்ந்து, உள்கட்டமைப்பு (3,698), வேலைவாய்ப்பு (2,795) மற்றும் அடிப்படை ஆவணங்கள் (2,726) பெறப்பட்டுள்ளன.

| விண்ணப்பம்: வெற்றி விகிதம் | | | | |
|---|---|---|---|---|
| உரிமைகள் | விண்ணப்பிக் கப்பட்டது | மொத்தத்தில் % | பெறப்பட்டது | விண்ணப் பித்ததில் % |
| சமூக பாதுகாப்பு திட்டங்கள் | 3,115 | 7.22% | 950 | 30.50% |
| உடல்நலம் | 1,510 | 3.50% | 1,137 | 75.30% |
| கல்வி | 40 | 0.09% | 33 | 82.50% |
| அடையாள அட்டைகள் | 4,116 | 9.54% | 1,621 | 39.38% |
| துணை சான்றிதழ்கள், ஆவணங்கள் | 6,834 | 15.83% | 2,726 | 39.82% |
| வீடு | 6,312 | 14.62% | 496 | 7.86% |
| நிலம் | 1,444 | 3.35% | 502 | 34.76% |
| உள்கட்டமைப்பு | 7,523 | 17.43% | 3,698 | 49.16% |
| வேலைவாய்ப்பு | 4,396 | 10.18% | 2,795 | 58.51% |
| நல வாரியங்கள் | 7,876 | 18.25% | 3,238 | 41.11% |
| **மொத்தம்** | **43,166** | **100.00%** | **17,196** | **39.31%** |

விண்ணப்பித்த விண்ணப்பங்களின் பணமாக்கப்பட்ட மதிப்பு ₹3.3 பில்லியன் இதில் ₹776 மில்லியன் பெறப்பட்ட உரிமைகளின் பண மதிப்பு (வெறும் 25%). இன்னும் வரும் நாட்களில் இவற்றின் மதிப்பு உயர்ந்து கொண்டே செல்லும் எனத் தெரிகிறது. நல வாரியங்களிலிருந்து அடிப்படை வருமான ஆதரவு, பெறப்பட்ட நிலம், வீட்டு மனை பட்டாக்கள்

| பணமாக்கப்படும் மதிப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| திட்டம் | அலகு (₹) | விண்ணப்பிக்கப்பட்டது | பெறப்பட்டது | பணமாக்கப்பட்ட மதிப்பு (₹) | கணக்கீடு |
| **சமூக பாதுகாப்பு திட்டங்கள்** | | | | | |
| முதியோர் ஓய்வூதியம் | 1,000 | 1,960 | 530 | 63,600,000 | மாதம் ₹1,000* (60 வயதுக்கு மேல்) |
| தனித்து வாழும் பெண்கள் | 1,000 | 874 | 319 | 38,280,000 | மாதம் ₹1,000* |
| மாற்றுத்திறனாளிகள் | 1,500 | 281 | 101 | 18,180,000 | மாதம் ₹1,000* |
| **கல்வி** | | | | | |
| கல்வி உதவித்தொகை | 7,545 | 11 | 11 | 83,000 | பெறப்பட்டது |
| அடையாள அட்டைகள் (குடம்ப அட்டை) | 100 | 1,637 | 834 | 10,008,000 | 4 பேர் கொண்ட குடும்பம் (மாதம் 20கிலோ அரிசி @ ₹5/- ஒரு கிலோ)* |
| **வீடு மற்றும் நிலம்** | | | | | |
| வீட்டுவசதித் திட்டம் | 280,000 | 2,645 | 348 | 97,440,000 | ஒரு வீட்டிற்கு சராசரியாக ₹2.8 லட்சம் (ஒரு முறை) |
| வீட்டுமனை பட்டா | 200,000 | 3,667 | 148 | 29,600,000 | 2 சென்ட்டுக்கு சராசரியாக ₹2 லட்சம் (ஒருமுறை) |
| நில பட்டா | 200,000 | 1,005 | 402 | 80,400,000 | 2 சென்ட்டுக்கு சராசரியாக ₹2 லட்சம் (ஒருமுறை) |
| விவசாய நிலம் | 1,000,000 | 439 | 100 | 150,000,000 | 1.5 ஏக்கருக்கு சராசரியாக ₹10 லட்சம் (ஒரு முறை) |
| **வேலை வாய்ப்பு** | | | | | |
| சுய வேலை வாய்ப்பு | 7,000 | 279 | 1 | 7,000 | |
| வேலைவாய்ப்பு (MNREGA) | 281 | 3,747 | 2,571 | 72,245,100 | 100 நாட்களுக்கு (ஒரு வருடத்திற்கு) |
| நல வாரியம் | 1,000 | 4,405 | 1,467 | 176,040,000 | மாதம் ₹1,000* |
| சிறுகுறு விவசாயி சான்றிதழ்கள் | 3,000 | 67 | 44 | 15,840,000 | மாதம் ₹1,000* |
| மீனவர் நல வாரியம் | 5,000 | 846 | 33 | 3,300,000 | மீன்பிடி தடைக்காலத்தில் ஆண்டுக்கு இரண்டு மாதங்களுக்கு @₹5,000* |
| **உள்கட்டமைப்பு** | | | | | |
| எரிவாயு | 1,650 | 56 | 21 | 34,650 | ஒரு இணைப்புக்கு ₹1,650 |
| மின்சாரம் | 450 | 328 | 262 | 14,148,000 | மாதம் 100 யூனிட்* |
| கழிப்பறை | 12,000 | 2,323 | 615 | 7,380,000 | அரசு மானியம் ₹12,000 |
| **மொத்தம்** | **₹1,721,526.45** | **24,570** | **7,807** | **₹776,502,750** | |

**குறிப்பு:** *10 ஆண்டுகளுக்கு கணக்கிடப்பட்டுள்ளது

ஆகியவை மக்களின் நீண்ட கால உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு வழிவகுத்து கூட்டு நல்வாழ்வுக்கு பங்களிக்கும்.

மேல்கண்ட அட்டவணையில் பெறப்பட்ட உரிமைகளின் பணமாக்கப்பட்ட ₹650 மில்லியன் மதிப்பிற்கு ஈடாக, மருத்துவக் காப்பீட்டின் மதிப்பு 90% உள்ளது. இது குடும்பத்தை ஆழமான வறுமையில் தள்ளும் எதிர்பாரா மருத்துவ செலவினை தவிர்க்க உதவுகிறது. மேலும் இது மன அழுத்தத்தைக் குறைத்து ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

| உடல்நலம் | அலகு (₹) | விண்ணப்பங்கள் | பெறப்பட்டது | பணமாக்கப்பட்ட மதிப்பு | கணக்கீடு |
|---|---|---|---|---|---|
| மருத்துவ காப்பீட்டு திட்டம் | 500,000 | 735 | 605 | 302,500,000 | தேவையின் அடிப்படையில் / ஓர் ஆண்டு |
| மருத்துவ காப்பீடு (PMJJY) | 200,000 | 152 | 0 | 0 | |
| மருத்துவ காப்பீடு (PMSBY) | 200,000 | 90 | 0 | 0 | |
| இ-ஷராம் | 200,000 | 2,625 | 1,738 | 347,600,000 | |
| **மொத்தம்** | **₹1,100,000** | **3,602** | **2,343** | **₹650,100,000** | |

| பிற வகைகள்/ மற்ற பிரிவுகள் | விண்ணப்பிக் கப்பட்டது | பெறப்பட்டது |
|---|---|---|
| பள்ளி இடைநிற்றல் | 14 | 11 |
| இடமாற்று / பள்ளிச் சான்றிதழ் (TC) | 6 | 6 |
| முதல் பட்டதாரி சான்றிதழ் | 8 | 4 |
| பிறப்பு சான்றிதழ் | 522 | 241 |
| இறப்பு சான்றிதழ் | 26 | 23 |
| குழந்தை தடுப்பூசி | 3 | 3 |
| வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர் | 177 | 134 |
| திருத்தங்கள் (குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஆதார், பான்) | 1,159 | 205 |
| வாக்காளர் அடையாள அட்டை | 361 | 109 |
| ஆதார் | 596 | 170 |
| பான் | 363 | 303 |
| சாதி சான்றிதழ் | 4,613 | 1,823 |
| வாரிசு சான்றிதழ் | 264 | 6 |
| வருமான சான்றிதழ் | 899 | 314 |
| பிறப்பிட சான்றிதழ் | 191 | 107 |
| குடியிருப்பு சான்றிதழ் | 46 | 19 |
| வேலை | 10 | 0 |
| குழாய் நீர் | 1,461 | 1,063 |
| ஜல் ஜீவன் | 3,331 | 1,737 |
| சாலை வசதி | 24 | 0 |
| கோவிட் தடுப்பூசி | 529 | 529 |
| வேலைவாய்ப்பு அலுவலக பதிவு | 122 | 31 |
| வேலைவாய்ப்பு அலுவலகத்தில் புதுப்பித்தல் | 248 | 192 |
| வங்கி கணக்கு | 23 | 10 |
| திருமண சான்றிதழ் | 6 | 5 |
| **மொத்தம்** | **15,002** | **7,045** |

# ஒப்புகை

இந்த வியக்கத்தகு முயற்சியில் முக்கிய பணி ஆற்றிய மாவட்ட வழிகாட்டிகள் மற்றும் பொறுப்பாளர்கள் முறையே ஜான் K திருநாவுக்கரசு (அரியலூர்), K. பழனிசாமி, C. கஸ்தூரி (கோயம்புத்தூர்), D. லதா (தருமபுரி), S. அண்ணாதுரை, G. ஜெனிபர் மேரி (திண்டுக்கல்), S. ஜெயமணி (ஈரோடு), T. ஜெயசுந்தரம் (கன்னியாகுமரி), S. நாகலட்சுமி, R. தினேஷ் பாபு (கரூர்), C. ராமு, R. கீதா (கிருஷ்ணகிரி), மனோகரி தாஸ், V. யோகலதா (மதுரை), K. பாலசந்திரன் (மயிலாடுதுறை), A. சுந்தரமூர்த்தி (நாகப்பட்டினம்), S. குப்பன், S. சுதா (நாமக்கல்), M. ஆல்வாஸ் குட்டான், R. விஜயா (நீலகிரி), A. ராமசந்திரன் (பெரம்பலூர்), R. K. தாஸ், K. லலிதா (புதுக்கோட்டை), S. கருப்பசாமி, B. யுவபாரதி (இராமநாதபுரம்), C. ராமு, M. கவிதா (சேலம்), A. ரோனிக்கா மேரி, P. சிவப்பிரியா (சிவகங்கை), X. ராஜகுமாரி (தஞ்சாவூர்), Dr. சாபு சைமன், A. கலாமணி, மற்றும் P. முருகேசன் (தேனி), ஜூலியட் மற்றும் C. அல்பர்ட் ராபின்சன் சிலுவை (தூத்துக்குடி), மகேந்திரபாபு (திருச்சிராப்பள்ளி), C. சங்கர், M. தேவி (திருப்பத்தூர்), R. குருசாமி, P. கிருஷ்ணவேணி (திருப்பூர்), S. மீராசா, E. ஸ்ரீதேவி (திருவள்ளூர்), D. ராஜா, R. ஆஷாராணி (திருவண்ணாமலை), V. விஜயகுமார், C. ஜெனிபா (திருவாரூர்), S. எட்வர்ட் உதயராஜ், P. சுந்தரேசன் (வேலூர்) மற்றும் A. மனோஸ் (விருதுநகர்) ஆகியோர்களின் ஒப்பற்ற பணிகளை பாராட்டுகிறோம்.

இந்த ஒட்டுமொத்த பணிக்கு மாநில அளவிலிருந்து உதவிய HRFன் மூத்த ஒருங்கிணைப்பாளர் N. சித்ரா, ஒருங்கிணைப்பாளர்கள் ஹால்ஸியன் பெர்ணான்டஸ், R. ரேவதி, இணை ஒருங்கிணைப்பாளர்கள் N. திவ்யா, K. மதுரவள்ளி, பெறப்பட்ட உரிமைகள் குறித்த புள்ளி விவரங்கள் பராமரிப்பு மற்றும் பகுப்பாய்வில் ஈடுபட்ட C. அனிதா, S. கீதாவாணி, மற்றும் ஒருங்கிணைத்து வழிநடத்திய துணை இயக்குனர் P. தமிழரசி ஆகியோருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

எட்வின்
திட்ட இயக்குனர், HRF
**05 மார்ச் 2023**

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, சென்னை

m: 86680 91452 | e: sdgwatch@hrf.net.in | www.hrf.net.in